# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

**1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. ____________________ ப் போற்றி நன்றி கூறும் நாள் தைப்பொங்கல்.

(மதியை, மழையை, கதிரவனை)

2. நகுதல் என்ற சொல்லின் பொருள் ____________________ .

(கற்றல், சிரித்தல், மகிழ்தல்)

3. புலவர் பிசிராந்தையாருடன் நட்புக் கொண்டிருந்த மன்னன் ____________________ .

(சேரலாதன், கோப்பெருஞ்சிங்கன், குலோத்துங்கன்)

4. வேட்டையாடுதல் ____________________ நிலத்திற்குரிய தொழிலாகும்.

(குறிஞ்சி, மருதம், நெய்தல்)

5. அறுசுவைகளுள் கசப்புச் சுவையை நீக்குவது ____________________ .

(புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு)

6. ஒலிம்பிக் போட்டியின் முத்திறநோக்கங்களில் ஒன்று ____________________ .

(உயர்வு, தாழ்வு, பணிவு)

7. மூவேந்தர்களில் சோழரது கொடி ____________________ .

(மீன்கொடி, புலிக்கொடி, விற்கொடி)

8. "வரப்புயர" என்று மன்னனை வாழ்த்திய புலவர் ____________________ .

(பாவேந்தர், மோசிகீரனார், ஔவையார்)

9. பளுவைத் தூக்குவதற்குப் பயன்படும் விலங்கு ______________.

(புலி, கரடி, யானை)

10. தொலைத்தொடர்பு அற்ற காலத்தில் தூதாகச் சென்ற பறவை

______________ .

(காகம், புறா, குயில்)

11. **குறள்:-** எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்

______________ காண்ப தறிவு

(மெய்ப்பொருள், சொற்பொருள், கருப்பொருள்)

12. ஆறுமுகநாவலர் பிறந்த ஊர் ______________ .

(நல்லூர், மானிப்பாய், கந்தரோடை)

13. மீன்பாடும் வாவி என்ற சிறப்புப் பெயருக்குரிய இடம் ______________ .

(திருமலை, மட்டுநகர், யாழ்நகர்)

14. ______________ காற்றினால் மரங்கள் முறிந்தன.

(பெய்த, எறித்த, வீசிய)

15. இளங்கோ______________ நாட்டின் இளவரசன்.

(சேர, சோழ, பாண்டிய)

16. கல்வியின் தேவையை வலியுறுத்திப் பாவேந்தர் எழுதிய நூல்

______________ .

(அழகின் சிரிப்பு, இருண்டவீடு, குடும்பவிளக்கு)

17. **பழமொழி :-** ____________________ திருவினையாக்கும்.

(இகழ்ச்சி, முயற்சி, புகழ்ச்சி)

18. அறம் + நூல் என்பதைச் சேர்த்து எழுதினால் ____________________ .

(அறம்ந்நூல், அறநூல், அறம்நூல்)

19. திருக்கேதீச்சுரம் ____________________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.

(திருகோணமலை, வவுனியா , மன்னார்)

20. பூம்புகார் அங்காடி பற்றிய செய்தி ____________________

காணப்படுகிறது.

(வளையாபதியில், சிலப்பதிகாரத்தில், மணிமேகலையில்)

21. மன்னார் ______________ வணிகத்தில் உலகப் புகழ் பெற்றிருந்தது.

(வைரம், முத்து, பவளம்)

22. முதியவர் வயிற்று ____________________ துடித்தார் .

(வலியால், வளியால், வழியால்)

23. ஏழை விறகு வெட்டியின் ____________________ ஆற்றுக்குள் விழுந்தது.

(கத்தி, மண்வெட்டி, கோடரி)

24. காடுபடு செல்வங்களுள் ஒன்று ____________________ .

(மயிற்பீலி, அரிசி, ஆனைந்து)

25. ஆறு கடலோடு கலக்கும் இடம் ____________________ .

(துறைமுகம், பட்டினம், கழிமுகம்)

26. எழிலியால் நேற்று பூ மாலை ________________ .

(கட்டப்படும், கட்டப்பட்டது, கட்டப்படுகின்றது)

27. காவலரைக் கண்ட கள்வன் ________________ என விழித்தான்.

(கடுகடு, திருதிரு, குறுகுறு)

28. ________________ தனது பெற்றோரின் சொற்படி நடப்பான்.

(அவன், அவள், அவர்கள்)

29. தொலைநோக்கியைக் கண்டுபிடித்தவர் ________________ .

(கலிலியோ, மார்க்கோனி, மோர்சு)

30. நாங்கள் ________________ நூல்களைக் கற்கவேண்டும்.

(நல்லநல்ல, அக்கம்பக்கம், கேட்கக்கேட்க)

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

மலர் நிறைந்த பொய்கையும் விண்மீன் நிறைந்த வானமும் எப்பொழுதும் கவிஞர் மனதைக் கவரும் இயற்கைக் காட்சிகளாகும். காலையிலே தோன்றும் கதிரவன் ஒளியில் களித்து விரியும் தாமரை மலரைக் காணும் பொழுது கவிஞரின் உள்ளமும் மலரும். நீல வானத்தில் கதிரவன் ஒளிவீசி எழுகிறான். கண்களைக் கவரும் அழகு வாய்ந்த தாமரை மலர்களைச் சுற்றி வண்டுகள் தேன் எடுப்பதற்காகப் பறக்கின்றன. கதிரவன் ஒளியால் இதழ் விரித்த செந்தாமரை மலரில் வெள்ளை அன்னம் ஒன்று இனிதாக அமர்ந்திருக்கின்றது. நீரலைகள் அந்தச் செந்தாமரையை ஆட்டி அசைக்கின்றன. அன்னம் குழந்தை போல் அம்மலரின் மேல் துயில் கொள்கிறது.

1. மலர் நிறைந்த பொய்கையும் விண்மீன் நிறைந்த வானமும் யார் மனதைக் கவரும்?

 ______________________________

2. கதிரவன் ஒளியில் களித்து விரிவது எது?

 ______________________________

3. தாமரை மலர்களைச் சுற்றிப் பறப்பன எவை?

 ______________________________

4. செந்தாமரை மலரில் இனிதாக அமர்ந்திருப்பது எது?

 ______________________________

5. எவை செந்தாமரையை ஆட்டி அசைக்கின்றன?

 ______________________________

புள்ளிகள் 10

**3) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.**

| | | |
|---|---|---|
| பேரும்புகழும் | உற்றார்உறவினர் | சின்னஞ்சிறிய |
| கேட்கக்கேட்க | கமகம | |

1. வன்னியில் எழில்நிலா ______________ இன்றித் தனியே வாழ்கின்றாள்.

2. யாழிசையைக் ______________ இனிமையாக இருந்தது.

3. தாயைப் பிரிந்த ______________ குழந்தை அழுது கொண்டிருந்தது.

4. அம்மாவின் சமையல் ______________ என மணம் வீசியது.

5. மன்னார்ப் பட்டினம் ______________ கொண்டு விளங்கியது.

| புள்ளிகள் 10 |
|---|

**4) பாடநூல் வினா ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. மக்களைக் கவரும் விந்தையான விலங்குகள் எங்கே காணப்படுகின்றன?

______________________________________________

______________________________________________

2. தமிழர்களின் வீரவிளையாட்டுகளில் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

3. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?

______________________________________________

______________________________________________

4. மன்னாரில் வயல்களுக்குத் தேவையான நீர் எக்குளத்திலிருந்து பெறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

5. நானிலங்களின் பெயர்களைத் தருக?

______________________________________________

______________________________________________

6. கண்பார்வை இழந்தோரும் கண்டுணரும் கலை எது?

______________________________________________

______________________________________________

7. நெடுஞ்சேரலாதனுடைய அரசவையில் கணிகன் கூறியது என்ன?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

5) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

*மின்னி முகிலும் இடிக்குதே*
*மெல்ல மழையுந் தூறுதே*
*மண்ணில் நீண்ட நாட்களாய்*
*மறைந்திருந்த செடிகளே*

*கண் திறந்து பாருங்கள்*
*காலையாகி விட்டதே*
*வண்ண மலரை மலர்த்துங்கள் - எங்கும்*
*வாசனையைப் பரப்புங்கள்*

*வண்டு வந்து தேனெடுத்து - நீங்கள்*
*வாடி வதங்க முன்னரே*
*மாவீரர் கல்லறைக்கு - நாளும்*
*மகிழ்வாய்ச் சென்று சேருங்கள்*

1. மின்னி இடிப்பது எது?

_______________________________________________

2. மண்ணில் மறைந்திருந்தவை எவை?

_______________________________________________

3. எதைப் பரப்புங்கள் என்று கூறப்படுகிறது?

_______________________________________________

4. எது வந்து தேன் எடுக்கும்?

_______________________________________________

5. எங்கே மகிழ்வாய்ச் சென்று சேருங்கள் எனக் கூறப்படுகிறது?

_______________________________________________

புள்ளிகள் 10

6) கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை எழுதுக.

| | | |
|---|---|---|
| விரும்பிய | குஞ்சுகள் | சிறகுகள் |
| வந்து | கூடு | |

குருவி ஒன்று மரக்கிளையில் ______________ கட்டியது. அக்கூட்டில் முட்டைகளை இட்டு அடைகாத்துக் ______________ பொரித்தது. குஞ்சுகள் மிகவும் சிறியனவாக இருந்தன. அவற்றுக்கு ______________ முளைக்காததால் கூட்டிலேயே இருந்தன. தாய்ப்பறவை நாள்தோறும் இரைதேடிக் கொண்டு ______________ குஞ்சுகளுக்குக் கொடுக்கும். சில நாட்கள் சென்ற பின் குஞ்சுகளுக்கு சிறகுகள் முளைத்தன. நீங்களும் பறக்கக் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுதுதான் நீங்கள் ______________ உணவைத்தேடி உண்ணமுடியும் என்று தாய்ப்பறவை கூறியது.

புள்ளிகள் 10

## 7. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

I went to the seaside and played with my friends. I played in the sand. I made sand castles. I playd football too. My father bought me food. My mother bought me a toy in the shop.

Jeg legede med mine venner på stranden. Jeg legede i sandet. Jeg byggede et sandslot. Jeg legede også med bold. Min far købte mad til mig. Min mor købte mig et legetøj i butikken.

Sono andato al mare e ho giocato con i miei amici. Ho giocato nella sabbia. Ho fatto castelli di sabbia. Ho anche giocato con la palla. Mio padre mi ha comprato del cibo. Mia madre mi ha comprato un giocattolo in un negozio.

Ik was naar de kust geweest en heb daar met mijn vrienden gespeeld. Ik speelde in het zand. Ik had zandkastelen gemaakt. Ik heb ook gevoetbald. Mijn vader had eten voor mij gekocht. Mijn moeder had een speelgoed voor mij gekocht

Jag gick till stranden och lekte med mina vänner. Jag lekte på sanden. Jag byggde sandslott. Jag spelade också fotboll. Min pappa köpte mat till mig. Min mamma köpte en leksak till mig i affären.

Jeg dro til kysten og lekte med mine venner. Jeg lekte i sanden. Jeg laget sandslott. Jeg spilte fotball også. Min far kjøpte mat til meg. Min mor kjøpte en leke til meg i butikken.

Ich ging an den Strand und spielte mit meinen Freunden. Ich spielte im Sand. Ich baute ein Haus aus Sand. Ich spielte auch mit dem Ball. Mein Vater kaufte mir Essen. Meine Mutter kaufte mir im Laden Spielzeug.

Je suis allé à la plage et joué avec mes amis. J'ai joué au sable et fabriqué des châteaux de sable. J'ai aussi joué au football. Mon père m'acheté à manger et ma mère m'a acheté des jouets dans un magasin

புள்ளிகள் 05

8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து; 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

- பாவேந்தர்

- விளையாட்டுகளும் அவற்றால் ஏற்படும் நன்மைகளும்
  (குழுவிளையாட்டு, தனிவிளையாட்டு, உமக்குப்பிடித்த விளையாட்டு)

- விலங்குகள்

| புள்ளிகள் 15 |
|---|